(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 161.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

**2026 ஜூலை 07, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

766/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்ட ரீதியாக பொலிஸ் பாதுகாப்புப் பெற உரித்துடைய பதவிகள் மற்றும் அத்தகைய பதவிகளை வகிக்கும் நபர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(ii) பொலிஸ் பாதுகாப்புப் பெற உரித்தற்ற நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் கடந்த காலத்தில் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தமையை ஊடகங்கள் சுட்டிக்காட்டியிருந்தன என்பதை அறிவாரா;

(iii) அவ்வாறாயின், அவ்விடயம் தொடர்பான தகவல்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

774/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் கொரியாவில் E - 8 வீசா வகுதியின் கீழ் தொழில் வாய்ப்புகளை வழங்குதல் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமையொன்று ஏற்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தொழில் வாய்ப்பு வழங்கும் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) குறித்த தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு பின்பற்றப்படும் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

844/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வதிவிடப் பயிற்சி அளிக்கப்படாது வீட்டு வேலைகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்கள் சென்றுள்ள நாடுகள் யாவை;

(iii) 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்திற்கு அமைவாக வீட்டு வேலைகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு வதிவிடப் பயிற்சி அளிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வதிவிடப் பயிற்சி அளிக்கப்படாது வீட்டு வேலைகளுக்கு வெளிநாடுகளுக்கு ஆட்கள் அனுப்பப்பட்டுள்ளதால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு ஏற்பட்டுள்ள வருமான இழப்பு எவ்வளவு;

(v) வீட்டு வேலைகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் அனைத்து இலங்கையர்களுக்கும் வதிவிடப் பயிற்சி அளிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

884/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணபித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணபித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1019/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையில் தற்போது கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) திணைக்களங்கள் மற்றும் மாகாணங்களுக்கிடையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பகிர்வு குறித்து அண்மைக்காலமாக ஏதேனும் மீளாய்வுகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதிலிருந்து பெறப்பட்ட முக்கியமான கண்டறிதல்கள் யாவை என்பதையும்;

(iv) அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்காக இதுவரையில் முறையாக அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள் வெளியிடப்படவில்லையா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தகைய தாமதத்திற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1031/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபைக்காக அங்கீகரிப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்ற சிறுவர்கள் தொடர்பில் அதிகாரசபையிடம் சட்டரீதியான அதிகாரம் காணப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி சட்டரீதியான அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் முறைமை யாது என்பதையும்;

(vi) மேற்படி நிறுவனத்தை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1249/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் திணைக்களத்தில், மண் பரிசோதனைக்கான வழிமுறையொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

(iii) மண் பரிசோதனைச் செய்யப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) மண் பரிசோதனைக்காக இற்றைவரை நிறுவப்பட்டுள்ள ஆய்வுக்கூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(vi) 2024 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பரிசோதனைச் செய்யப்பட்ட மண் மாதிரிகளின் எண்ணிக்கை, அந்த மண் மாதிரிகள் பெறப்பட்ட இடங்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1318/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடாக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கையில் 2500 இற்கும் மேற்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் நீண்டகாலமாக அரச நியமனத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர் என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 61 ஆயுர்வேத மருத்துவ நியமனங்களில் யுனானி மருத்துவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாமையினால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டவாறு ஆயுர்வேத மருத்துவர்களுக்கு அரச நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1375/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையிலுள்ள பழக்கப்படுத்தப்பட்ட யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி யானைகளின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) மேற்படி யானைகளை தம்வசம் வைத்திருப்பதற்கான உரிமப்பத்திரம் வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் யாவை;

(iv) மேற்படி யானைகள் தொடர்பில் பின்னாய்வு செய்வதற்கும் தொடர்ச்சியாக ஆராய்ந்தறிவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா;

(v) ஆமெனில், அது தொடர்பில் அமுலில் உள்ள பொறிமுறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1803/2025

கௌரவ லால் பிரேமநாத்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள தபால் நிலையங்கள் வகைப்படுத்தலுக்கு அமைவாக வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி மாவட்டத்தில் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் மற்றும் அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி மாவட்டத்தில் தபால் நிலையங்களை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா;

(v) இன்றளவில் குறிப்பிட்ட சில தபால் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதை அறிவாரா;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(vii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(viii) மாவட்டத்தின் தபால் சேவையினை சுமூக நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(ix) அதற்காக எடுக்கும் காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அகுரஸ்ஸ தபால் நிலைய அதிபரின் நிருவாக ரீதியான குறைபாடுகள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதா;

(ii) ஊழியர்கள் அவருக்கெதிராக எதிர்ப்பு நடவடிக்கைளில் ஈடுபடுகின்றார்கள் என்பதை அறிவாரா;

(iii) அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) இன்றேல், ஏன்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47 ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2026 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2026.06.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 82 ஆம் மற்றும் 92 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 156 ஆம் பிரிவின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2026 மார்ச் 30 ஆம் திகதிய 2482/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2026.06.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உஉ) என்னும் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 156 ஆம் பிரிவின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2026 மார்ச் 30 ஆம் திகதிய 2482/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2026.06.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 17 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 திசெம்பர் 23 ஆம் திகதிய 2468/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2026.06.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2026 மாச்சு 03 ஆம் திகதிய 2478/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 141, 143, 144, 157அ, 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 மார்ச் 19 ஆம் திகதிய 2480/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ், செஸ் வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2026 மாச்சு 03 ஆம் திகதிய 2478/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ், அறவிடப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய செஸ் வரி விகிதங்கள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2026 மாச்சு 10 ஆம் திகதிய 2479/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம் (இல. 1),— வெளிநாட்டுப் பணமனுப்பல்களின் பிரகாரம், வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரியதாக 2022 மே 01 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேச திட்டம் தொடர்பாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2025.04.02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டதும், 2025 ஒக்டோபர் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் 318 எனும் இலக்கத்தைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடு களுக்கமைய சட்டத்துறை தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*13.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம் (இல. 2),— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் குறித்த நிறுவனங்கள் தொடர்பாக அக் குழுக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சபையாவணப்படுத்தப்பட்ட பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர்களில் உள்ளடக்கப்பட்ட அறிக்கைகள் ஊடாக இனங்காணப்பட்ட பின்வரும் இணைப்புகளில் குறிப்பிடப்படுகின்ற சம்பவங்கள் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 120(4) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

**இணைப்பு:**

| தொடர் இலக்கம் | நிறுவனம் | குழுக்கூட்டம் நடாத்தப்பட்ட திகதி | அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி மற்றும் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் | குறிப்பிட்ட சம்பவம்/ சம்பவங்கள் |
|---|---|---|---|---|
| 1. | தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 2025.03.05 மற்றும் 2025.03.27 | 2025.06.04 PS 212 | 1. 510 கிலோ கிராம் நிறையுடைய Rough Sapphire Cluster மாணிக்கக்கல். |
| | | | | 2. ஹெரணியாவக்க மாணிக்கக்கல் படிவுகளை அகற்றிக்கொள்வதற்கான கருத்திட்டம். |
| | | | | 3. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல். |
| 2. | ஸ்ரீஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை | 2025.0515 | 2025.07.24 PS 242 | 1. மின்சாரக் கட்டமைப்பின் பாதுகாப்புக்குத் தருவிக்கப்பட்ட சாதனங்களை பிரதான கட்டமைப்புடன் இணைத்தல். |
| | | | | 2. கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலுள்ள முறைகேடுகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள். |
| | | | | 3. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | 2025.05.08 மற்றும் 2025.07.17 | 2025.12.18 PS 391 | 1. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு நிதியிலிருந்து சேதனப் பசளைத் திட்டத்திற்கு பணம் செலவிடுதல் |
| | | | | 2. திரு. எஸ்.ஆர். ரெங்கனாதனுக்கு காணி வழங்குதல் (மாத்தளை பேகுரூப் தோட்டம்). |
| | | | | 3. திருமதி. மாலினீ நாணயக்காரவுக்கு காணி வழங்குதல் (இம்புல்கஸ்வாடிய, கட்டான) |
| | | | | 4. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு காணிகளை வழங்குதல். |
| 4. | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 2025.06.04 | 2025.12.18 PS 392 | 1. பல்கலைக்கழகத்தில் புதிய நூலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல். |
| | | | | 2. பல்கலைக்கழக பணியாட்டொகுதிக்கு வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் போது இடம்பெற்ற முறைகேடுகள். |
| | | | | 3. 2021ஆம் ஆண்டில் தொழிநுட்ப பீடத்திற்கு நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்தல். |
| | | | | 4. பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதியின்றி மண் வெட்டுதல். |
| | | | | 5. உப வேந்தருக்குச் சொந்தமான வீடொன்றினை குத்தகை அடிப்படையில் மாணவர் விடுதிக்காக வழங்குதல். |
| 5. | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 2025.08.20 | 2025.12.18 PS 394 | 1. வீரவில சுற்றுலா பங்களாவைப் புனரமைத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | லங்கா சதொச லிமிடட் | 2025.10.10 | 2025.12.18<br>PS 397 | 1. ஊழியர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தல். |
| | | | | 2. கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு உரித்தான 15000 சதுர அடி கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் வழங்குதல். |
| | | | | 3. செயலாற்றுகை கொடுப்பனவு மற்றும் தொழில்சார் கொடுப்பனவுகள். |
| | | | | 4. போக்குவரத்துக் கொடுப்பனவுகள். |
| 7. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் | 2025.02.27<br>மற்றும்<br>2025.05.23 | 2026.01.08<br>PS 435 | 1. வதிவிட பயிற்சிகள் வழங்கப்படாமல் வீட்டுப் பணிப் பெண்களை வெளிநாடு களுக்கு அனுப்புவதால் பணியகத்திற்கு நட்டம் ஏற்படுதல். |
| | | | | 2. வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல். |
| | | | | 3. Glocal Fair (ஜயகமு ஶ்ரீ லங்கா) நிகழ்ச்சித்திட்டம் |
| | | | | 4. Glocal Fair (ஜயகமு ஶ்ரீ லங்கா) நிகழ்ச்சித்திட்டத்திற்கு கடைகள் பெற்றுக் கொள்ளுதல். |
| | | | | 5. “விகமனிக ஹரசர” நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.19 மற்றும் 2025.11.26 | 2026.02.19 PS 476 | 1. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி (Bimputh Finance PLC) நிறுவனத்திற்கு கடன் வழங்குதல். |
| | | | | 2. ஆட்கள் இரண்டு பேருக்கு 2020 டிசம்பர் 23ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ரூ.மி. 164.73 ஆன கூட்டாதனக் கடன். |
| | | | | 3. கடன் தகவல் பணியக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள கடன் வசதிகள் 10 இன் முறையற்ற மீளச் செலுத்தலைக் கவனத்தில் கொள்ளாது கடன் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூ.மி. 12.6 ஆன கடன் தொகை வழங்கப்பட்டமை. |
| | | | | 4. RPI Private Limited எனும் மாலைத்தீவு கம்பனிக்கு வங்கியினால் வழங்கப்பட்டுள்ள 9 மில்லியன்கள் பெறுமதியான ஐக்கிய அமெரிக்க டொலர் கூட்டுக்கடன். (Syndicate Loan) |

*14.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*17.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

20.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

896 /2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகப் பிரிவில் ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

897/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) உரிய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?